*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தாவரப் பாதுகாப்புச் சட்டம்*

---

*(1999 ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, ஒற்றோபர் மாதம் 08 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 14.00** **தபாற் செலவு : ரூபா 5.25**

***1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தாவரப் பாதுகாப்புச் சட்டம்***

[*1999 ஒற்றோபர்மாதம் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ.31/97*

***இலங்கையிலுள்ள தாவரங்களுக்கும் தாவரங்களின் நன்னிலைமைக்கும் தீங்குவிளைவிக்கின்ற அல்லது ஊறு விளைவிக்கின்ற அல்லது அவற்றை அழிக்கின்ற ஏதேனும் நுண்ணங்கியை இலங்கையினுட் கொண்டுவருவதற்கும் அதன்கண் பரப்புவதற்கும் எதிராக ஏற்பாடுசெய்வதற்கும்; (447 ஆம் அத்தியாயமான) தாவரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை நீக்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தாவரப் பாதுகாப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

***பாகம்*** I

***சட்டத்தின் நிருவாகம்***

*கமத்தொழிற்பணிப் பாளர் தலைமை யதிபதியை நியமித்தல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவரான) கமத்தொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தினால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட பணிகளைப் புரிவதன்மூலம் இச்சட்டத்தின் பொது நிருவாகத்துக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.*

*அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர்கள்.*

***3.*** *இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுப்பதில் பணிப்பாளர் தலைமையதிபதி தனக்கு உதவும் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும் ; அவர்கள் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்" என அறியப்படுதல் வேண்டும்.*

## பாகம் II

### நடவடிக்கைமுறை

சோதனையிடும் நோக்கத்துக்காக வளவுகளினுட் பிரவேசித்தல்.

**4.** (1) ஒரு பீடையை அல்லது பீடைகளைப் பதுக்கி வைப்பதாகச் சந்தேகிக்கப்படும் எவையேனும் வளவுகளின்கண் ஒரு பீடை அல்லது பீடைகள் உள்ளனவாவென்பதைச் சோதனையிட்டுப் பரிசோதிக்கும் நோக்கத்துக்காக அவ்வளவுகளின்மீது நியாயமான எல்லா நேரங்களிலும் உதவியாளர்களுடனோ உதவியாளர்களின்றியோ பிரவேசிப்பது அதற்கான நியாயமான ஏதுக்களையுடைய பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப அத்தகைய பீடையின் அல்லது பீடைகளின் இறக்குமதியாளர் அல்லது அத்தகைய வளவுகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், அத்தகைய சோதனைக்கும் பரிசோதனைக்கும் நியாயமான எல்லா வசதிகளையும் ஏற்பாடுசெய்து கொடுத்தலும் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் ஆளடையாளம், வளவுகளினுட் பிரவேசிப்பதற்கு முன்னர் வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட் சியாளருக்குக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சோதனைக்கும் பரிசோதனைக்கும் பின்னர், எவையேனும் வளவுகளில் ஒரு பீடை அல்லது பீடைகள் உள்ளனவென்று பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் திருப்திப்படின், அத்துடன் பீடையின் அல்லது பீடைகளின் தன்மையையும் அது அல்லது அவை பரவக்கூடிய சாத்தியத்தையும் கவனத்திற்கொண்டு, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், விடயத்திற்கேற்ப அத்தகைய பீடையின் அல்லது பீடைகளின் இறக்குமதியாளருக்கு அல்லது அத்தகைய வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு ஒரு பணிப்பில் குறித்துரைக்கப்படக் கூடியவாறாக அத்தகைய பீடை அல்லது பீடைகள் பரவுவதைத் தடுப்பதற்கான அத்தகைய வழிமுறைகளை நிறைவேற்றும்படி அல்லது அத்தகைய வேலையைச் செய்துமுடிக்கும்படி அத்தகைய இறக்குமதியாளரை அல்லது அத்தகைய வளவுகளின் சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரைப் பணித்து, தனது முடிபை அதற்கான காரணங்களுடன் எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்.

(3) பீடையின் அல்லது பீடைகளின் இறக்குமதியாளர் அல்லது வளவுகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கெதிராக 9 ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைச் செய்தாலொழிய பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஆக்கப்பட்ட அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுவது அத்தகைய இறக்குமதியாளரின், சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் கடமையாதல் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது அவர்களுக்கு உதவும் ஆள் பிரவேசித்தல் முதலியன காரணமாக அத்துமீறுபவராகக் கருதப் படுதலாகாது என்பது.*

**5.** பணிப்பாளர் தலைமையதிபதியோ அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலவலரோ அல்லது அவர்களுக்கு உதவும் எவரேனுமாளோ எவையேனும் வளவுகளினுள்ளான ஏதேனும் பிரவேசம் காரணமாக அல்லது தாவரங்களையும் தாவர உற்பத்திப்பொருட்களையும் அழித்தல் காரணமாக அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது செய்யப்பட்ட காரியம் காரணமாக அத்துமீறுபவர் ஒருவராகக் கருதப்படுதலோ அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது இதன்கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதி எதனையும் நிறைவேற்றுவதில் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதனதும் காரணமாக, எவையேனும் சேதவீடுகளுக்கு அல்லது குற்றவழக்குத் தொடுப்புக்கு அது தீய எண்ணத்துடனும் நியாயமான, நிகழற்பாலதான ஏதுவின்றியும் செய்யப்பட்டிருந்தாலொழியவும் அல்லது செய்யாதுவிடப்பட்டிருந்தாலொழியவும் ஆளாகவிருத்தலோ ஆகாது.

*வழிமுறைகளை நிறைவேற்றுவதற்கு அல்லது வேலையைச் செய்து முடித்து அதற்கான செலவுகளை அறவிடுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு*

**6.** (1) ஏதேனும் பீடையின் அல்லது பீடைகளின் இறக்குமதியாளர் அல்லது எவையேனும் வளவுகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், எவையேனும் வளவுகளில் அல்லது அவற்றின்மீது எவையேனும் வழிமுறைகளை நிறைவேற்றுவதற்கு அல்லது ஏதேனும் வேலையைச் செய்து முடிப்பதற்கு 4 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுமிடத்தும் அல்லது பணிக்கப்படுமிடத்தும் அத்தகைய ஆள் அத்தகைய தேவைப்பாட்டுக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகத்

*அல்லது அதிகாரமளிக்கப் பட்ட அலுவலருக்கு உள்ள தத்துவம்.*

தவறுமிடத்தும், அசட்டையாகவிருக்குமிடத்தும் அல்லது மறுக்குமிடத்தும், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், உதவியாளர்களுடன் அல்லது உதவியாளர்களின்றி, அத்தகைய வழிமுறைகளை நிறைவேற்றும் அல்லது அத்தகைய வேலையைச் செய்து முடிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய வளவுகளினுட் பிரவேசிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ், எவையேனும் வளவுகளினுட் பிரவேசிக்கும் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக அவசியமானவாறான அத்தகைய சாதனத்தையும் எந்திரத்தொகுதியையும் வாகனங்களையும் அவருடன் எடுத்துச் செல்லலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ், எவையேனும் வளவுகளில் அல்லது வளவுகளின்மீது எவையேனும் வழிமுறைகளை நிறைவேற்றும் அல்லது ஏதேனும் வேலையைச் செய்து முடிக்கும் நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உறப்பட்ட நியாயமான எல்லாச் செலவுகளும், அத்துடன் அரசினால் உறப்பட்ட எவையேனும் செலவுகளும் அத்தகைய வழிமுறைகளை நிறைவேற்றுவதற்கு அல்லது அத்தகைய வேலையைச் செய்துமுடிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது பணிக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டுமென்பதுடன், இதன்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அவ்வாளிடமிருந்து அறவிடவும் படலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாளினால் செலுத்தப் படற்பாலனவான எவையேனும் நியாயமான செலவுகள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால், எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அந்த ஆள் வதிகின்றாரோ அல்லது அவ்வழிமுறைகள் நிறைவேற் றப்பட்டனவோ அல்லது வேலை செய்துமுடிக்கப்பட்டதோ அந்த நீதிவான் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப் பத்தின்மேல், (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட

அத்தகைய செலவுகளின் தொகை, அத்தகைய நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை விஞ்சுவதாகவிருப்பினுங்கூட அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றப்பணம் என்ற அதே முறையில் அறவிடப்படலாம்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் குற்றப்பணமொன்று சுமத்துவது, 4 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன் அல்லது பணிப்புடன் இணங்கியொழுக அவர் தவறியதன், அசட்டை செய்ததன் அல்லது மறுத்ததன் காரணமாக, அவர் எத்தவறுக்கு ஆளாகக்கூடுமோ, அத்தவறுக்கான வழக்குத் தொடுப்பு எதிலும் இருந்து அத்தகைய ஆளை விடுவித்தலாகாது.

## பாகம் III

### தொற்றுநோய்த் தடுப்புப் பீடைகள்

**7.** (1) இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டாலொழிய, இலங்கைக்குள் தொற்று நோய்த் தடுப்புப் பீடைகளாகவோ அல்லது ஏதேனும் தாவரத்தில் அல்லது தாவர உற்பத்திப் பொருளில் தொற்றுக் கொண்ட பீடையாகவோ எத்தொற்றுநோய்த் தடுப்புப்பீடைகள் இறக்குமதி செய்யப் படுதலாகாதோ, அத்தொற்றுநோய்த் தடுப்புப் பீடைகளைக் காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்புமூலம் அமைச்சர் வெளிப்படுத்தலாம். *தொற்று நோய்த் தடுப்புப் பீடைகள்.*

(2) இலங்கையில் எவ்விடப்பரப்புக்குள்ளும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட தொற்றுநோய்த் தடுப்புப்பீடையொன்று அல்லது பீடைகள் இருக்கின்றது அல்லது இருக்கின்றன என்பதற்கான நிரூபணத்தை ஆளெவரும் வைத்திருந்தால், அவர், அப்பீடை அல்லது பீடைகள் இருப்பது பற்றிய விடயத்தை உடனடியாகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(3) அவ்வாறு செய்யுமாறு எழுத்திலான குறித்த அறிவுறுத்தல் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டாலொழிய. இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் தொற்றுநோய்த் தடுப்புப் பீடையினால் பீடிக்கப்பட்டுள்ள ஏதேனும் தாவரத்தை

அல்லது தாவர உற்பத்திப் பொருளை, ஆளெவரும், தெரிந்துகொண்டே வைத்திருத்தலாகாது, விற்பனை செய்தல் ஆகாது, நடுதலாகாது, விடுவித்தலாகாது, ஒப்படைத்தலாகாது அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ஆகாது அல்லது தெரிந்து கொண்டே வைத்திருக்க, விற்பனைசெய்ய, நட, விடுவிக்க, ஒப்படைக்க அல்லது வேறுவகையில் கையுதிர்க்கச் செய்வித்தலாகாது அல்லது அனுமதித்தலாகாது.

(4) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும், இப்பிரிவின் அம்மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் தாவரம் அல்லது தாவர உற்பத்திப்பொருள் அழிக்கப்படுவதை அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படுவதைத் தடைசெய்தலாகாது.

(5) இலங்கைக்குள் ஏதேனும் இடப்பரப்பில் தொற்றுநோய்த் தடப்புப்பீடை அல்லது பீடைகள் இருப்பது தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தகவல் ஏதும் கிடைத்தால், அவர் அத்தகைய பீடையை அல்லது பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமென அவர் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை உடனடியாக எடுத்தல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் தொற்றுநோய்த் தடுப்புப் பீடை அல்லது எவையேனும் தொற்றுநோய் தடுப்புப் பீடைகள் அல்லது அத்தகைய பீடையால் அல்லது பீடைகளால் பீடிக்கப்பட்ட ஏதேனும் தாவரம் அல்லது தாவர உற்பத்திப் பொருள், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டபின்னர் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழும், இறக்குமதிசெய்யப்பட்ட பொருள்மீது பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய சரியான முறையில் தொற்றுநோய்த் தடுப்புச்செய்யப்படுவதற்கான வசதிகள் மற்றும் பயிற்றப்பட்ட ஆளணியினர் கிடைக்கக்கூடியனவாக இருக்கின்றனவா என்ற நிபந்தனைகள் உட்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கவும், கண்டிப்பாக இலங்கை அரசாங்கத்தினால் விஞ்ஞான ஆய்வுகள் செய்யப்படுவதற்காக மட்டும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படலாம்.

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் தொற்றுநோய்த் தடுப்புப் பீடையின் அல்லது பீடைகளின் அல்லது அத்தகைய பீடைகளால் தொற்றப்பட்ட தாவரத்தின் அல்லது தாவரங்களின் அல்லது தாவர உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியானது, விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கத் திணைக்களமொன்றின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் பயன்பாட்டுக்காக மட்டும், அத்துடன் அத்தகைய பீடையை அல்லது பீடைகளை அல்லது அத்தகைய தாவரங்களை அல்லது அத்தகைய தாவர உற்பத்திப் பொருட்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவும் அவற்றின் தொற்று நோய்த் தடுப்புக்காகவும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட பயிற்றப்பட்ட ஆளணியினர் உட்பட, சரியான வசதிகள் அத்திணைக்களத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் இருந்தால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## *மேன்முறையீடுகள்*

**8.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மேன்முறையீடுகள் குழாமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். *மேன்முறையீடுகள் குழாத்தின் அமைப்பு*

(2) மேன்முறையீடுகள் குழாமானது செயலாளரினால் நியமிக்கப்பட வேண்டியவர்களும், பூச்சியியல், தாவர நோயியல், நுண்ணுயிரியல், காளானியல், வைரஸ் இயல் அல்லது நிமற்றோட் புழு இயல் ஆகிய துறைகளில் தகைமை பெற்றிருக்கும் விஞ்ஞானிகளைக் கொண்ட பதினைந்து ஆட்களைக் கொண்ட குழாத்திலிருந்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை, அத்தகைய மேன்முறையீட்டுக் குழாமுக்குத் தவிசாளராகச் செயலாளர் நியமித்தல் வேண்டும்.

**9.** (1) நாலாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முடிபினால் இன்னலுற்ற ஆள் எவரும், அத்தகைய முடிபுபற்றி அவருக்குத் தெரியப்படுத்திய எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்குள், அத்தகைய மேன்முறையீட்டுக்கான காரணங்களைக் காட்டி, அத்தகைய முடிபுக்கெதிராகச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம். *மேன்முறையீடுகள்.*

(2) மேன்முறையீட்டுடன், செயலாளரினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறானதும், பணிப்பாளர் தலைமையதிபதியின் பெயருக்கு வரையப்பட்ட வங்கிவரைவொன்றாகவோ அல்லது காசுக்கட்டளையொன்றாக உள்ள அத்தகைய பணத்தொகை பணவைப்பொன்றுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். வைப்பானது, விடயத்துக்கேற்றவாறு, பணிப்பாளர் தலைமையதி பதியின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் முடிபை மேன்முறையீடு நிராகரித்தால் மட்டுமே, மீள அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) எட்டாம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டுக் குழாமானது, இரண்டு நாட்களுக்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் செயலாளருக்கு மேன்முறையீடு கிடைத்தபின்னர் ஏழு நாட்களுக்குள் அதன் முடிவை வழங்குதலும் வேண்டும். மேன்முறையீட்டுக் குழாத்தின் முடிபானது, இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டுமென்பதுடன் மேன்முறையீட்டாளருக்கும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கும் உடனடியாகச் செயலாளரினால் தெரிவிக் கப்படுதலும் வேண்டும்.

(4) மேன்முறையீட்டுக் குழாத்தின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படலாம்.

## பாகம் V

### *தவறுகளும் தண்டங்களும்*

தவறுகள். **10.** (1) சட்டமுறையான அதிகாரம் அல்லது சாக்கின்றி இச்சட்டத்தின் ஏற்பாடு எதனையும் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதி எதனையும் மீறுகின்ற ஆளெவரும், அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் செய்யக்கூடாத எதனையும் செய்தால் அல்லது செய்ய வேண்டிய எதனையும் செய்யாது விட்டால் அல்லது இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை நடைமுறைப்படுத்துவதில், பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை அல்லது அவர்களுக்கு உதவிசெய்யும் எவரேனும் ஆளை

அவர் எதிர்த்தால் அல்லது அவர்களுக்கு முட்டுக்கட்டை போட்டால் அல்லது எதிர்ப்பதில் அல்லது முட்டுக்கட்டை போடுவதில், உதவினால் அல்லது எதிர்ப்பதற்கு அல்லது முட்டுக்கட்டை போடுவதற்கு எவரேனும் ஆளைத்தூண்டினால், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் எவரும், நீதிவானொருவர் முன்னிலையில் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல், ஒரு மாதத்திற்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அத்தகைய தவறுக்குக் குறித்துரைக்கப்பட்டுள்ள தண்ட னையானது அத்தகைய நீதிவானின் சாதாரண நியாயாதிக்கத்துக்கு மிகையாகவுள்ளது எப்படியிருப்பினும். இச்சட்டத்திற்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு எதிரான ஏதேனும் தவறை சுருக்கமுறையாக விசாரிப்பது நீதிவானொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்திற்கு எதிரான ஏதேனும் தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட அல்லது புரிவதுடன் தொடர்புடைய ஏதேனும் வாகனம் அல்லது சுமைகாவி அல்லது வேறுசாதனம், பொறி அமைவு, கருவி அல்லது பொருள் அக்குற்றத்தீர்ப்பின் காரணத்தினால் அரசிற்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அதிகாரத்தின்கீழ் ஏதேனும் செயலைப் புரிகின்ற பாசாங்கின்கீழ் எவரேனும் ஆளுக்கு அவசியமற்ற வன்செயலை அவசியமற்ற இழப்பை அல்லது அவசியமற்ற தொந்தரவை விளைவிக்கின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*ஆட்கள் குழுவொன்றினால் தவறுகள் புரியப்படல்.*

**11.** இச்சட்டத்திற்கெதிரான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து, அப்போது -

(அ) அவ்வாட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருந்தால், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவரும் ; அல்லது

(ஆ) அக்குழுவானது குழுமம் ஒன்றாகவிருந்தால், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும் மற்றும் முகாமையாளர் ஒவ்வொருவரும் ;

அத்தவறானது அவரின் சம்மதமின்றி அல்லது அவரின் ஒருப்பாடின்றி புரியப்பட்டுள்ளதெனவும் அத்தைகைய தவறானது புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்துள்ளார் எனவும் அவர் எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

## பாகம் VI

### பொது

*ஒழுங்கு விதிகள்.*

**12.** (1) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் மற்றும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப் பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் அமைச்சர் பின்வருவனவற்றிற்காக, ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) பீடைகளை இலங்கையினுள் அறிமுகப்படுத்துவதனைத் தடுப்பதற்கு அல்லது அவற்றை முற்றாக அழிப்பதற்கு அல்லது அவை பரவுவதைத் தடுப்பதற்கு மற்றும் இலங்கையிலிருந்து தாவரங்களை, தாவர உற்பத்திப்பொருட்களை அல்லது நுண்ணங்கிகளை ஏற்றுமதிசெய்வதற்கு ;

(ஆ) இலங்கையினுள் ஏதேனும் தாவரங்களை, தாவர உற்பத்திப்பொருட்களை மற்றும் நுண்ணங்கிகளை இறக்குமதி செய்வதனை மட்டுப்படுத்துவதற்கு அல்லது தடைசெய்வதற்கு மற்றும் அவை இறக்கப் படக்கூடிய நுழைவு இடங்களை மட்டுப்படுத்துவதற்கு அல்லது தடைசெய்வதற்கு ;

(இ) ஒன்றில் முழுமையாக அல்லது நிபந்தனையின் பேரில் தாவரங்களை, தாவர உற்பத்திப்பொருட்களை மற்றும் நுண்ணங்கிகளை இலங்கையில் கொண்டுவந்து இறக்குவதனை மட்டுப்படுத்துவதற்கு அல்லது தடைசெய்வதற்கு ;

(ஈ) விசேட உரிமத்தின் கீழும் நிபந்தனைகளின்கீழும் நுண்ணங்கிகளை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கு ;

(உ) தரை இறக்கிய நேரத்தில், அதன் முன்னர் அல்லது அதன்பின்னர் தாவரங்களை, தாவர உற்பத்திப் பொருட்களை மற்றும் நுண்ணங்கிகளைப் பரிசோதிப் பதற்கு அத்துடன் அல்லது சோதிப்பதற்கு ;

(ஊ) எல்லாத் தாவரங்களையும், தாவர உற்பத்திப் பொருட்களையும் மற்றும் நுண்ணங்கிகளையும் அல்லது அவை பொதியிடப்படக்கூடிய பொதிகளை, பெட்டிகளை, பானைகளை அல்லது உறைகளை அவை ஏதேனும் பீடை அல்லது எவையேனும் பீடைகள் பாதித்திருக்கக் காணப்பட்டால் இறக்குமதியாளரின் அத்துடன் அல்லது சொந்தக்காரரின் செலவில் பரீட்சிப்பதற்கு, துப்புரவாக்குவதற்கு, புகையூட்டுவதற்கு அல்லது கிருமிநாசினி அடிப்பதற்கு அத்துடன் உசிதமானால் நட்டஈடு இல்லாமல் தரை இறக்குகையில், தரை இறக்குமுன்னர் அல்லது தரை இறக்கியதன் பின்னர் அழிப்பதற்கும் அவ்வாறு அழித்தமைக்கு விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களை இறக்குமதியாளர் அத்துடன் அல்லது சொந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கும் ;

(எ) விசேட இடப்பரப்புகளில் இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்படவேண்டிய தாவரங்கள், தாவர உற்பத்திப்பொருட்கள் மற்றும் நுண்ணங்கிகளின் தனிப்படுத்தி வைத்தலைத் தேவைப்படுத்தல் மற்றும் அத்தகைய தனிப்படுத்தி வைத்தலின் நிபந்தனைகளை நிர்ணயித்தல் மற்றும் அவற்றிற்கு அறவிடப்படவேண்டிய கட்டணங்கள் என்பவற்றிற்காக ;

(ஏ) இலங்கையினுள் ஏதேனும் பீடை பாதிப்பதனை அல்லது பரவுவதனைத் தடுப்பதற்காக ;

(ஐ) ஏதேனும் இடப்பரப்பை நோய்தொற்றிய இடப்பரப் பொன்றாக வெளிப்படுத்துவதற்கும் ஏதேனும்பீடை தொற்றியுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட குறித்துரைக் கப்பட்ட இடப்பரப்பில் நோய் பரவாமல் தகுந்த விதத்தில் தடைசெய்வதற்கும் ;

(ஒ) ஏதேனும் பீடையால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படும் சாத்தியமுள்ள தாவரங்களை, தாவர உற்பத்திப் பொருட்களை பரிசோதிப்பதற்கு, பரிகாரம் செய்வதற்கு அல்லது அழிப்பதற்கும் தகுந்தமுறையில் கையுதிர்ப்பதற்கும் ;

(ஓ) இலங்கையில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பில் அல்லது எவையேனும் இடப்பரப்பு களில் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதிகளுக்கு ஏதேனும் தாவரத்தின் அல்லது எவையேனும் தாவரங்களின் பயிர்ச் செய்கையை மட்டுப்படுத்துதல் அல்லது தடை செய்தல் ;

(ஔ) தாவரங்களை அல்லது தாவர உற்பத்திப் பொருட்களை அல்லது நுண்ணங்கிகளை இலங்கையில் ஒரு உள்ளூர்ப் பிரதேசத்திலிருந்து மற்றொன்றுக்கு இடம் மாற்றப்படுவதை ஒழுங்குபடுத்துவதற்கு ;

(க) பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் அத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் மதியுரை வழங்குவதற்கு அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதியுடன் நிர்வகிக்கப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு நடவடிக்கையை எடுப்பதற்கும் குழுக்களை அமைத்துருவாக்குவதற்கு ;

(ங) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தாவரங்களின், தாவர உற்பத்திப்பொருட்களின் அல்லது நுண்ணங்கிகளின் தாவர ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கு ;

(ச) இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான கட்டணங்களை அறவிடுவதற்கு.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப் படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் இச்சட்டத்தில் அடங்கியுள்ளதைப்போன்ற அதே வலுவும் பயனும் உடையதாதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியின் பின்னர் வசதிப்படக் கூடியவிரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அத்தகைய ஒழுங்குவிதி அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால், முன்னர் அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதெனக் கருதப்படும் தேதியைப் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*447 ஆம் அத்தியாயத்தை நீக்கஞ் செய்தலும் பாதுகாப்பும்.*

**13.** (1) (அத்தியாயம் **447** ஆகிய) தாவர பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

(2) மேற்படி கட்டளைச் சட்டம் நீக்கஞ்செய்யப்படுவது எவ்வாறிருப்பினும் நீக்கஞ்செய்யப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலிருக்கின்றவாறு. அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத அளவுக்கு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டஒழுங்குவிதியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் எதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## பாகம் VII

### *பொருள்கோடல்*

*பொருள் கோடல்.*

**15.** (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி -

"பிறப்பியல்பு ரீதியாக திரிபுபடுத்தப்பட்ட" என்பது காலத்துக்கு வெளியே எத்தன்மைத்தான வழிகள் மூலமும் உற்பத்தி செய்யப்பட்ட நியூகிளிக் அமில மூலக்கூறுகளை இயற்கையாக அவை காணப்படாத, ஆனால் தொடர்ந்து இனப்பெருக்கம் செய்யப்படக்கூடிய ஏற்பு நுண்ணங்கிக்குள் அவை இணைவதை அனு மதிக்குமுகமாக ஏதேனும் வைரஸுக்குள் பற்றீரியல் பிளாஸ்மிட்டுக்குள் அல்லது வேறு ஏதேனும் ஏற்பு முறைமைக்குள் உட்செலுத்துவதன்மூலம் புதிய வளர்தகு பொருட்களின் சேர்க்கைகளை உருவாக்குவதில் அல்லது பெறுவதில் தொடர்புபட்ட அல்லது விளையப்பட்ட ஏதேனும் செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட ஒரு நுண்ணங்கி என்று பொருள்படும்.

"இறக்குமதியாளர்" என்பது -

(அ) ஒப்படை செய்வோன், ஒப்படை கொள்வோன், முகவர், தரகர் என்ற வகையிலாயினுஞ்சரி, வேறு வகையாகவாயினுஞ்சரி ஏதேனும் தாவரத்தை, தாவர உற்பத்திப் பொருளை அல்லது நுண்ணங்கியை உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது அதன் கட்டுக்காப்பிற்கு அல்லது கட்டுப்பாட்டிற்கு ஏதேனும் விதத்தில் உரித்துடையவராயிருக்கும் எவரேனும் ஆள் ;

(ஆ) எந்த ஆளின் செயலினால் ஏதேனும் தாவரம், தாவர உற்பத்திப்பொருள் அல்லது நுண்ணங்கி இலங்கையில் தரையிறக்கப்பட்டுள்ளதோ அல்லது இலங்கையினுள் பிரவேசித்துள்ளதோ அந்த எவரேனும் ஆள்,

என்று பொருள்படும்.

"உயிர்வாழ்வு திரிபுபடுத்தப்பட்ட" என்பது மீள் சேர்க்கை டீஎன்ஏ தொழில்நுட்ப முறை, மூலக்கூறு உயிரியல் முறை, கல அல்லது இழைய வளர்ப்புமுறை, கல இணைப்புமுறை, செயற்கை இனச்சேர்க்கைமுறை போன்ற உயிரியல்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சேரவிடுவதன்மூலம், தொடர்பு கொள்ளவிடுவதன் மூலம் அல்லது மீளச்சேரும் செய்முறைமூலம் இயற்கையாக இடம்பெறும் வழிவகைகள் மூலமல்லாது வைரஸை, பேஜ்ஜை, பிளாஸ்மிட்டை, அவை போன்றவற்றைப் பயன்படுத்தும் கன்னமுறை மூலம் ஓர் நுண்ணங்கியின் இனப் பிறப்புப்பொருளை மாற்றுவதன்மூலம் அல்லது திரிபுபடுத்துவதன்மூலம் பெறப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட ஒரு நுண்ணங்கி என்று பொருள்படும் ;

"அமைச்சர்" என்பது கமத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் எனப் பொருள்படும்;

"இருப்பாட்சியாளர்" என்பது என்பது ஏதேனும் இடம் தொடர்பில் உரிமையாளர், குத்தகைக்கு எடுத்தவர், மேற்பார்வை யாளர், முகாமையாளர், கப்பல் அல்லது படகின் தலைவன் அல்லது அத்தகைய இடத்திற்கு உண்மையில் பொறுப்பாகவுள்ள வேறு ஆளை உள்ளடக்கும் ;

"நுண்ணங்கி" என்பது இயற்கையானதோ, பிறப்பியல்பு ரீதியாகத் திரிபுபடுத்தப்பட்டதோ உயிர்வாழ்வு திரிபுபடுத்தப்பட்டதோ அல்லது வேறுவகையிலான தோதான தாவரங்கள், பக்டீரியா, ஒரு கலத்தாவரம், பங்கஸ், தாவர நுண்ணங்கி, நிணநீர், நிணநீரை ஒத்த உயிரிகள், கலச்சுவர் இல்லாத நுண்ணங்கி, முதுகெலும்புள்ள, முதுகெலும்பில்லாத விலங்குகள் போன்றுள்ளனவாறும் மேலும் வைரசுகள், வைரோய்ட்கள், பரம்பரை அலகுகள், பேஜ்ஜீகள் அல்லது அதனுடன் தொடர்பான ஏதேனும் வாழ்வுயிரி உள்ளடங்கலாக ஏதேனும் செயற்பாடுள்ள, தொற்றக் கூடிய, உயிர் வாழ்வதாக வர்ணிக்கப்பட்டுள்ள உயிரி ஒன்றினது வாழ்க்கை அமைப்பு செறிதுயில் நிலையில் உள்ளவற்றையும் உள்ளடக்கும் ;

"சொந்தக்காரர்" என்பது, ஏதேனும் தாவரம், தாவர உற்பத்திப்பொருட்கள் அல்லது நுண்ணங்கிகளை வைத்திருப்பவர் அல்லது உடைமைகொண்டிருப்பவர் எனப் பொருள்படும் ;

"பீடை" என்பது, தாவரங்கள் அல்லது தாவர உற்பத்திப் பொருட்களுக்கு ஊறு அல்லது சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்தக்கூடியதான ஏதேனும் உயிர் சார் கருவி என்பதுடன் களைகளையும் உள்ளடக்கும் ;

"தாவரம்" என்பது, தாவரப் பெரும்பிரிவின் எல்லா அங்கத்தவர்களையும் உயிர்வாழ்கின்றதாயினும் அல்லது இறந்துவிட்டதாயினும் அல்லது ஏதேனும் அதனது பாகம் அல்லது பாகங்கள் அத்துடன் வித்துக்களையும் உள்ளடக்கும் எனப் பொருள்படும் ;

"தாவர உற்பத்திப் பொருட்கள்" என்பது, சிறுதானியம் உள்ளடங்கலாக தாவர தோறறுவாயின் பதனிடப் படாத எல்லாப் பொருட்களும் எனப் பொருளா வதுடன் அவற்றின் இயற்கைத் தன்மையால் அல்லது அவற்றினது பதனீடு காரணத்தால் பீடைகள் பரவுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கக்கூடியதான தாவர தோற்றுவாயின் பதப்படுத்தப்பட்ட உற்பத்தி களையும் உள்ளடக்கும் ;

"வளவுகள்" என்பது, ஏதேனும்நிலம், நீர்த்தாங்கி, கட்டிடம், தாபனம், களஞ்சியங்கள், வாடகைக் கப்பல், பொருட்கள் கொண்டு செல்லும் கொள்கலன்கள், வாகனம், கப்பல், விமானம் அல்லது தாவர உற்பத்திப் பொருட்களை வைத்திருப்பதற்காக, களஞ்சியப் படுத்துவதற்காக, கொண்டுசெல்வதற்காக அல்லது தாவரங்களை வைத்திருப்பதற்காக, களஞ்சியப்படுத்து வதற்காக, இடம் பெயர்ப்பதற்காக அல்லது வளர்ப் பதற்காக முழுமையாக அல்லது பகுதியாகப் பயன்படுத்தப்படும் போக்குவரத்துச் சாதனம் எனப் பொருள்படும் ;

"தொற்று நோய்த்தடுப்புப் பீடை" என்பது, இலங்கையினுள் ஏதைனும் இடப்பரப்புக்கு பொருளாதாரத்தில் செயல்விளைவை ஏற்படுத்தக்கூடிய அல்லது சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த அங்கு தற்போது இன்னும் இல்லாத அல்லது தற்போதுள்ள ஆனால் பரந்த முறையில் விநியோகிக்ப்படாததும் உத்தியோக பூர்வமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுமான பீடை எனப் பொருள்படும் ;

"செயலாளர்" என்பது, கமத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் எனப் பொருள்படும் ; அத்துடன்

"களைகள்" என்பது, மனிதனுடனும் அவனது செயற்பாடு களுடனும் போட்டியாகவும் விடாப்பிடியாகவும் அழிவுண்டாக்கக்கூடியதாகவும் தலையிடுவதாகவும் உளள ஒரு தாவரம் எதுவோ அத்தாவரம் எனப் பொருள்படும்.

(2) இந்தச் சட்டத்தில் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளில் ஏதேனும் நுண்ணங்கியின் விஞ்ஞானப் பெயரொன்றுக்கான ஏதேனும் குறிப்பீடானது, அந்த குறிப்பிட்ட நுண்ணங்கிக்காகப் பயன்படுத்தப்பட்ட எல்லா ஒரே பொருட்சொற்களுக்கான ஒரு குறிப்பீடாகப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தில் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளில் ஒரு குறிப்பிட்ட பீடைக்கான ஏதேனும் குறிப்பீடானது, அந்தப் பீடை எந்த நிலையிலும் உள்ளமை பற்றிய ஒரு குறிப்பீடு என்று பொருள்கொள்ளப்படல் வேண்டும்..

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*